## இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இ.க.நி இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களாக கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய கூட்டுத்தாபனத்திற்கு எதிராக உள்ள வழக்குகள் தொடர்பான நிகழத்தக்கவைகள் இ.க.நி 12 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை நிதி அறிக்கையிடல் வடிவமைப்புக் கட்டமைப்பின் பிரகாரம் சொத்துக்கள் பொறுப்புகளுக்கு ஈடுசெய்யப்படலாகாத போதிலும் அமைச்சு மற்றும் ஏனைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறவேண்டிய கணக்குகளின் ரூபா 1,072,579 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் நடைமுறைச் சொத்துக்களிலிருந்து கழித்துக் காண்பித்திருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 199,746,090 பெறுமதியான கடன்பட்டோர் மீதி தொடர்பாக ஐயக்கடனுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்துக்களின் பெறுமானத்தேய்வை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 107,391,542 பெறுமதியான சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 8,405,735 பெறுமதியான எரிபொருள் பகிர்ந்தளித்தல் அலகு மற்றும் ட்ரொலி வாகனம் பெறுமானத்தேய்விடபட்டிராததுடன் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய விகிதம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 5,713,042 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டுப் பெறுமதியான ரூபா 588,241,847 நடைபெற்றுவரும் வேலையிலிருந்து கழித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் வேறான விடயமாக வெளிக்காட்டப்பட வேண்டிய நடைபெற்றுவரும் மூலதன வேலைப் பெறுமதியான ரூபா 18,704,293 நிலையான சொத்துக் கணக்கிற்கு

மாற்றப்பட்ட காரணத்தால் அப் பெறுமதியால் நிலையான சொத்துக்கள் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்கான குத்தகை வட்டி ரூபா 647,077 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் ஒவ்வொரு விடயம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி | பட்டோலைகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி | வேறுபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கடன்பட்டோர் | 24,826,945 | 23,515,143 | 1,311,802 |
| பயணச் செலவு முற்பணங்கள் | 176,168 | 175,143 | 1,025 |
| விசேட முற்பணங்கள் | 10,654,829 | 9,582,626 | 1,072,203 |
| முற்கொடுப்பனவுகள் | 45,527,950 | 28,342,466 | 17,185,484 |
| தலைமை அலுவலக கணக்கு | 28,533 | (9,397) | 37,930 |
| கையில் உள்ள காசு | | | |
| - காலி | 213,526 | 9,622 | 203,904 |
| - பேருவளை | 3,642,320 | 81,719 | 3,560,601 |
| - ஹம்பாந்தோட்டை | 304,878 | 307,878 | 3,000 |
| நிலையான சொத்துக்கள் | 4,635,032,102 | 4,607,922,074 | 27,110,028 |
| மிரிஸ்ஸ துறைமுகத்தின் கடன்கொடுத்தோர் | இல்லை | 392,943 | 392,943 |
| பார்வையிடும் வருமானம் | 5,179,860 | 5,176,215 | 3,645 |

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியில் பின்வருமாறு கடன்பட்டோரின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,980,486 ஆகக் காணப்பட்டது.

| **விபரம்** | **செலவு மீதிகளின் பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| புராணவெல்ல | |
| - எரிபொருள் கடன்பட்டோர் | 514,638 |
| - கொட்பே | 1,417,824 |
| ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறவேண்டிய பணம் | 44,707,321 |
| சில்லறைக் காசுக் கட்டுநிதி – முகத்துவாரம் | 634 |
| - வேலைத்தளம் | 385 |
| மிரிஸ்ஸ துறைமுகத்தில் கையில் உள்ள காசு | 1,339,684 |
| கூட்டுத்தொகை | 47,980,486 |

### 1.2.4 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்பட்டோர் மீதி மற்றும் பதவியணி கடன்பட்டோர் மீதி முறையே ரூபா 199,746,090 ஆகவும் ரூபா 17,343,290 ஆகவும் இருந்ததுடன் இக் கடன் மீதிகளின் அறவீடு மந்தமான நிலையில் காணப்பட்டன.

(ஆ) மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தின் இயந்திரவியல் தொழிற்சாலைகளை குத்தகைக்கிடப்பட்டமையால் 1999 முதல் 2006 ஆகஸ்ட் மாதம் வரை கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய குத்தகைத் தொகையின் பெறுமதி ரூபா 332,382 ஆகக் காணப்பட்டதுடன் அக் குத்தகைத் தொகையை அறவிடுவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,657,710,369 கூட்டுத்தொகையான பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 4,635,032,102 | நிலையான சொத்துப் பதிவேடு |
| சம்பள முற்பணம் | 247,795 | விபரமான பட்டோலை |
| காசுப் பரிமாற்றல் கட்டுப்பாட்டுக் கணக்கு | 974,317 | விபரமான பட்டோலை |
| குடாவெல்ல சேகரிப்புக் கணக்கு | 6,250,706 | பட்டோலை மற்றும் வங்கி இணக்கக் கூற்று |
| நிதிக் கட்டணம் | 10,349,232 | விபரமான பட்டோலை |
| ஏனைய வைப்புக்கள் | 4,856,217 | விபரமான பட்டோலை |
| | 4,657,710,369 | |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 371 | மீளாய்வாண்டின் போது 21 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,342,960 தொகையான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு அந்த ஊழியர்களுக்காக சம்பளமாக ரூபா 493,992 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.2.7 போதிய அதிகாரப் பொறுப்பால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி 2009 ஆம் ஆண்டு வரை முன்கொண்டுவரப்பட்டிருந்த நட்டமான ரூபா 389,613,495 தொகையும் பதிவழிக்கப்பட வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 81,769,569 தொகையும் நிலையான சொத்து மீள்பெறுமதியிடல் ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 190,648,226 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 164,314,807 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 26,333,419 ஆல் அதாவது 16 சதவீதத்தால் வீழ்ச்சி காணப்பட்டது. பதவியணி கிரயம், தாபன மற்றும் நிர்வாகக் கிரயம் மற்றும் நிதிக் கிரயம் அதிகரித்தமை இதற்குப் பிரதான காரணமாகியிருந்தன.

### 2.2 கூட்டுத்தாபனத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் 100,000 கியூப் கடல் மணலை அகற்றுதல் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 69 மில்லியன் தொகை (வரியல்லாது) முற்பணமாகச் செலுத்தி 2006 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடு 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த முற்பணத் தொகை மீளாய்வாண்டின் போது ரூபா 76,261,312 ஆகக் (பெறுமதி சேர் வரியுடன்) காணப்பட்டதுடன் அக் கடன்பட்டோர் மீதி, கடன்கொடுத்தோர் மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின 17 மீன்பிடித் துறைமுகங்களில் 06 துறைமுகங்களில் பின்வருமாறு செயற்பாட்டு நட்ட நிலை அவதானிக்கப்பட்டது.

| மீன்பிடித் துறைமுகம் | 2011 ஆம் ஆண்டிற்கான நட்டம் | 2010 ஆம் ஆண்டிற்கான நட்டம் | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நட்டத்தில் அதிகரிப்பு /(குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மிரிஸ்ஸ | (6.877) | (1.147) | 500 |
| தொடன்துவ | (3.971) | (3.408) | 17 |
| ஹிக்கடுவ | (5.585) | (4.188) | 33 |
| கற்பிட்டி | (2.584) | (3.469) | (26) |
| சிலாபம் | (5.418) | - | - |
| வாழைச்சேனை | (5.944) | - | - |

(ஆ) 03 மீன்பிடித் துறைமுகங்களின் செயற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| மீன்பிடித் துறைமுகம் | 2011 ஆம் ஆண்டிற்கான இலாபம் | 2010 ஆம் ஆண்டிற்கான இலாபம் | இலாபத்தில் வீழ்ச்சி சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| புராணவெல்ல | 1.281 | 2.078 | 38 |
| கோட்பே | 8.796 | 11.197 | 21 |
| முகத்துவாரம | 38.266 | 39.364 | 3 |

(இ) 12 செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 100 சதவீதத்திற்கு மேலான சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

**3.2 விளைவற்ற வளங்கள்**

2007 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 13,456,059 பெறுமதியான இணையதள வசதிகளுடனான உள்ளகத் தொலைபேசி முறைமை எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாமையின் காரணத்தால் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் கரையோர வள முகாமைத்துவச் செயற்திட்டத்தினதும் உதவியிலிருந்து ரூபா 224 மில்லியன் செலவு செய்யப்பட்டு சிலாபத்தில் மீன்பிடித் துறைமுகம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத் துறைமுகத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைச் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையால் அங்கு கடமையாற்றும் மனித வளம் விளைவற்றுக் காணப்பட்டது. இதற்காக சம்பளம், வேதனங்கள் மற்றும் மேலதிக நேர வேலைப்படிப்பணமாக ரூபா 7,519,468 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் 03 சட்டத்தரணிகள் இருக்கையில் வெளிச் சட்டத்தரணிகளுக்காக ரூபா 498,600 கட்டணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு குறித்த தினத்தில் செலுத்தப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,505,835 தொகை மிகைக்கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகத்துவார மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த ஒரு கப்பலில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நங்கூரக் கட்டணம் ரூபா 10,520,113 தொகையான போதிலும் இதில் ரூபா 4,844,739 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருக்கையில் கப்பல் விடுவிக்கப்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த நிதி இழப்பு ரூபா 5,675,374 ஆக இருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிவாண்டின் போது வங்கி மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 1,214,552 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 15 மாதங்கள் கடந்ததன் பின்னர் அதாவது 2013 மே 31 ஆம் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு முற்றிலும் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக திறந்த மற்றும் நிபந்தனையற்ற கூற்றொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பாதீடு சாத்தியத்தன்மை வாய்ந்ததாகத் தயாரிக்கப்பட்டிராமையால் பாதீடு மற்றும் உள்ளபடியான தரவுகளுக்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் நிலவியமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமானம்
(ஆ) கணக்கீடு
(இ) கடன்கொடுத்தோர்
(ஈ) கடன்பட்டோர்
(உ) சொத்துக் கட்டுப்பாடு
(ஊ) முற்கொடுப்பனவுகளும் பணி நிமித்தக் கட்டுநிதி தொடர்பான கட்டுப்பாடு
(எ) பதவியணி முகாமைத்துவம்
(ஏ) பாதீட்டுக் கட்டுப்பாடு